SRI RAMACHANDRA
INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH
(Category - I Deemed to be University) Porur, Chennai
Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in
NEWS RELEASE

# "COCHLEAR IMPLANT AWARENESS NEEDED SO THAT NO CHILD IS LEFT OUT"

20th January, 2023.

There should be a greater awareness for cochlear implant programme so that no child in the country is left out for want of this surgery said Dr.Kalanidhi Veeraswamy, Member of Parliament while speaking at the anniversary of "CLIPS" at Sri Ramachandra Institute of Higher Education and Research here today.

Organised to mark the first surgery done 17 years ago the event was totally presented by children who had undergone this surgery. Many of them recited Thirukkural, some danced and exhibited their skills in cognition and speech. Dr. Kalanidhi said most of the children spoke fluently and looked as good as normal children. With government and private insurance facilities available we should ensure that no child is left deaf he added.

Speaking on the occasion the Vice Chancellor Dr.P.V. Vijayaraghavan said all medical colleges in the country should have the speech, language and hearing sciences department so that the benefit of cochlear implant surgery by the ENT department is fully realised.

Dr.L.Somu HoD of ENT, Head and Neck Surgery department said over 300 cochlear implant surgeries have been done at SRIHER of which 197 benefited from the Tamil Nadu Chief Minister's Comprehensive Insurance Scheme.

Speaking on the occasion Dr. Prakash Boominathan, Principal, Sri Ramachandra Faculty of Audiology and Speech Language Pathology, said that if the surgery is done early the child could learn to speak fluently and join school like other normal children.

.......................

For more information pls. contact….Dr.L.Somu, HoD, ENT, Head and Neck Surgery, SRIHER, 9840041597.
Issued by Mr. T. G. Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578, mediarelations@sriramachandra.edu.in

SRI RAMACHANDRA
INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH
NEWS RELEASE
(Category - I Deemed to be University) Porur, Chennai
Ph.: 044-23860217. www.sriramachandra.edu.in

# “காது கேளாமையை அறவே நீக்க காக்ளியர் சிகிச்சை விழிப்புணர்வு தேவை”

சென்னை, 20 ஜனவரி 2023

நாட்டில் காது கேட்காமை பிரச்சினையை அறவே ஒழிக்க காக்ளியர் கருவி பொருத்து அறுவைசிகிச்சை சார்ந்த விழிப்புணர்வு தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் Dr. கலாநிதி வீராசாமி கேட்டுக் கொண்டார். ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் காக்ளியர் அறுவைசிகிச்சை செய்யப்பட்ட 17வது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் பேசிய அவர் இந்நிகழ்ச்சியில் பங்குபெற்ற பல குழந்தைகள் மற்ற குழந்தைகள் போல் தெளிவாக பேசுவதை கேட்டு மகிழ்ச்சியடைந்தேன். தமிழ்நாடு அரசு விரிவான காப்பீட்டு திட்டம் உட்பட பிற அரசு மற்றும் தனியார் காப்பீடு வசதிகள் உள்ளதால் பிறவியில் காது கேட்காத எல்லா குழந்தைகளுக்கும் காக்ளியர் அறுவை சிகிச்சை செய்ய விழிப்புணர்வு தீவிரமாக்கப்பட வேண்டும் என்று கூறினார்.

நிகழ்ச்சியில் பேசிய ஸ்ரீ இராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் துணை வேந்தர் Dr. P.V. விஜயராகவன் நாட்டிலுள்ள எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் கேட்பியல், பேச்சு மற்றும் மொழி துறை செயல்பட்டால்தான் காக்ளியர் கருவி பொருத்து சிகிச்சையின் முழு பலனையும் பெற்று குழந்தைகள் இயல்பாக பேச முடியும் என்று கூறினார். ஸ்ரீ இராமச்சந்திராவின் காது, மூக்கு, தொண்டை, தலை மற்றும் கழுத்து அறுவை சிகிச்சைத் துறைத் தலைவர் Dr. L. சோமு பேசுகையில் இதுவரை இங்கு 300க்கும் மேற்பட்ட இந்த சிகிச்சைகள் நடைபெற்றிருப்பதாகவும், அதில் 197 குழந்தைகள் தமிழ்நாடு முதலமைச்சர் விரிவான மருத்துவக் காப்பீடு திட்டத்தின்கீழ் பயன்பெற்றுள்ளனர் என்றும் கூறினார்.

குழந்தையின் இளம் வயதிலேயே காது கேட்காமை கண்டறியப்பட்டு, காக்ளியர் சிகிச்சை பெற்றால் குழந்தைகள் எளிதாக பேசி மற்ற குழந்தைகளைப் போல் பள்ளியில் சேர்ந்து சிறக்க முடியும் என்று ஸ்ரீ இராமச்சந்திராவின் கேட்பியல், பேச்சு மற்றும் மொழித் துறையின் தலைவர் Dr. பிரகாஷ்பூமிநாதன் கூறினார். இந்த நிகழ்ச்சியை காக்ளியர் அறுவை சிகிச்சை பெற்ற குழந்தைகளே தொகுத்து வழங்கினர். ஆடல், பாடல் மற்றும் பிற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. குழந்தைகளுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

-----------------------------------

For more information pls. contact….Dr.L.Somu, HoD, ENT, Head and Neck Surgery, SRIHER, 9840041597.
Issued by Mr. T. G. Nallamuthu, Consultant, Media Relations, 9940399346, 9444265578,
mediarelations@sriramachandra.edu.in